Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 742/2024

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade.III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | ஊராட்சி மன்ற தலைவர் |
| பெயர். | - | அமுதாதேவி | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| க /பெ. | | வீரன் | சமயம் | - | |
| கிராமம் | - | ஒதியத்தூர் | வயது | - | 42 |

10.09.2025

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது ஒதியத்தூரில் வசித்து ஒதியத்தூர் கிராம ஊராட்சி மன்ற தலைவராக இருந்து வருகிறேன். எதிரியை தெரியும். எங்கள் ஊராட்சிக்கு முகையூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து அரசின் நலத்திட்டங்கள் மற்றும் அரசால் வழங்கப்படும் பொருட்கள் எங்கள் ஊராட்சிக்கு வரும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊராட்சிக்கு கொசு அடிக்கும் மெஷின் வாங்க முடிவு செய்யப்பட்டு மெஷின் வாங்குவதற்காக முகையூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரியை அணுகி எங்கள் ஊராட்சி கணக்கிலிருந்து பணத்தை எடுத்து கொசு அடிக்கும் மெஷின் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு அனுப்பி மெஷினை வாங்குமாறு கூறியிருந்தார்.

2. அதே போல் எங்கள் கிராம கணக்கிலிருந்து சுமார் ரூ.72,000/- அளவிற்கு மெஷின் வாங்குவதற்காக எடுக்கப்பட்டது. ஆனால் மெஷினின் உண்மையான விலை ரூ.62,450/- ஆகும். சுமார் ரூ.10,000/- அளவிற்கு எதிரி மெஷின் விலையை விட அதிகமாக பணம் எடுத்துள்ளதாக தெரிய வந்தது. இது சம்மந்தமாக வட்டார வளர்ச்சி அலுவலர் எதிரி மீது

மாவட்ட குற்றப்பிரிவில் புகார் கொடுத்தார். எனது ஊராட்சி போலவே 21 ஊராட்சிகளிலும் எதிரி இது போன்று செய்தார் என தெரியவந்தது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

(Sd/-R.SenthilKumar)
D.M-cum-JM.
T.V.Nallur.